போக்குவரத்துத் துறை

# அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகங்கள்!

## எகிறும் லஞ்சங்கள்... அதிரடி காணுமா அரசு?

கடந்த மாதம் 9–ம் தேதி சென்னையில் இருந்து அமுதராஜ் என்பவரது இருசக்கர வாகனம் காணாமல்போனது குறித்து, அவர் அளித்த புகாரின் பேரில், சென்னை குமரன் நகர் போலீசாரால் CSR பதிவு செய்யப் படுகிறது.

அதே நேரத்தில் அந்த புகார் பெற்றதற்கான நடவடிக்கைக் காக காவல் அதிகாரிகளால், RTO அலுவலகத்திற்கு ஏதும் தகவல்கள் தரப்பட்டதா என்றால் இல்லை, அதேபோல் காவல் அதிகாரிகளின் மூலம் CSR பெற்ற அமுதராஜ், RTO அலுவலகத்திற்கு சென்று, காணமல்போன வாகனம் குறித்து CSR – நகலையும் இணைத்து, RTO அலுவலர்கள் மூலமாக 'பிளாக்' செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.

இப்படியிருக்கிற நிலையில், வாகனத்தை திருடியவன் எப்படியும் வாகனத்தை விற்பான், அப்போது RC கார்டு ஒரிஜினல் தேவைப்படும். RC ஒரிஜினலோ, தன்னிடம் இருக்கிறபோது,நமது ஒப்புதல் இல்லாமல் எப்படி பெயர் மாற்றம் செய்ய முடியும்? அப்போது திருடனை பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையில், துப்பறியும் போலிசார் போல் இணையதளம் mParivahan –னை தொடர்ந்து அமுதராஜ் ஆய்வு செய்துகொண்டு வருகிறபோது அவரது வாகனம், கடலூர் வட்டாரப் போக்குவரத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது தெரியவருகிறது.

உடனே சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு தகவல்களை தெரியப்படுத்தி விட்டு, ஊடகம் மற்றும் இணையதளம் மூலமாக வும் செய்திகளும் பரப்புரையாக்கப்பட்டு வைரலாக்கப்படுகிறது.



சிவசங்கரன்

இதில் அமுதராஜ் அவர்களால், காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட திருட்டு புகாரை ஏற்கிற போதே, முதலில் உங்கள் வாகனம் திருட்டு போனது குறித்து RTO அலுவலரிடம் போய் பதிவு செய்து விட்டு, அந்த 'பிளாக்' செய்த சான்றிதழின் நகலோடு புகார் மனுவில் இணைத்து வழங்க வேண்டும் என்ற உத்தரவுகளை காவல் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தால், இதனால் தற்போது ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து மற்றும் காவல் நிலைய அதிகாரிகளுக்கான தலைகுனிவு நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அமுதராஜ் யிடம் புகார் பெற்ற குமரன் நகர் போலீ சாரால், இதனை கையாளவில்லை, அதன்

விளைவே இந்த செய்தி வைரலானதும், காவல் மற்றும் போக்குவரத்து துறையினருக்கும் பெரும் களங்கம் ஏற்பட வழிவகுத்ததோடு போக்குவரத்து துறையின் பணியாளர்களான சாந்தி மற்றும் கவிதா ஆகியோர் இருவரது பணியிடை நீக்கத்திற்கான கோப்புகள் மெல்ல நகர தொடங்கி விட்டது.

அதே நேரத்தில் எல்லா விபரமும் அறிந்த அமுதராஜூம் சென்னை, கே.கே.நகர் RTO அலுவலரை சந்தித்து, புகார் அளித்து அன்றே 'பிளாக்' செய்திருந்தாலும், இப்படியொரு முறை கேடான பணிகள் நடந்திருக்க வாய்ப்புகள் இல்லாமல் போய் இருக்கும். ஆனால் அமுதராஜ் வேண்டுமென்றேதான் RTO–ல் பிளாக் செய்ய வில்லை, திருடியவனால் விற்பனை செய்யப் படுகிறபோது அந்த திருடனை பிடிக்க வேண்டும் என அமைதி காத்தேன் என RTO அலுவலரிடமும் மற்றும் அவரது நண்பர்களிடமும் அமுதராஜ்–ம் தெரிவித்து வந்துள்ளார்.

ஆனால், இப்படி திருட்டு வாகனத்தை வாங்குகிறவர்கள் பெரும் பாலும் சமூக குற்றவாளிகளாகத்தான் இருப்பர் என்றாலும், இதிலும் இரண்டு ரகமாகத்தான் இருந்து வருகின்றனர். அதனால் அவர்களுக்கு எந்த RC கார்டும் தேவையில்லை. தங்களது குற்றத்திற்காக பயன்படுத்தி விட்டு காவலர்களிடம் சிக்காத வரை உபயோகப்படுத்தி வருவர். அதே நேரத்தில் சிக்கி விட்டால் அந்த வாகனத்தை அப்படியே விட்டு விட்டும் போய்விடுவர். அதே போல் சில வாகன அதிகாரிகளால் விபத்து வழக்கிலும், காவல் அதிகாரிகளின் ஆய்வுகளிலும் சிக்கும் நேரத்திலும் கூட, அந்த அதிகாரிகளால் பெறப்படும் லஞ்சத்திலாலும் அந்த திருட்டு வாகனங்கள் சிக்காமல் தப்பிச் சென்றும் சாலையில் பயணித்து வரும் நிலைகளும் இன்றுவரை இருந்து கொண்டு தான் உள்ளது. எனவே இப்படியொரு ஊழல்கள் நடைபெறும் நிலைகள் இருக்கும்வரை இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

அதே நேரத்தில் திருட்டு வாகனத்தை வாங்கும் மற்றொரு ரகமாக செயல்படுபவர்கள் அரசு அதிகாரிகளின் சோதனைகளில் இருந்து தப்பிப் பதற்காக, மற்றொரு திருட்டு வேலையினையும் செய்து அதனை ஒரிஜினலாக்க முயற்சித்து வருகின்றனர். இதன் வீரியத்தை உணராத சிலர் அறிந்தோ அறியாமலோ உள்ள, இது போன்ற சுகூட சூப்பிரண்டுகளும், அலுவலக அஸிஸ்டெண்டுகளும் 'பலி'யாடுகளாகி சிக்கிக் கொண்டு, விழிபிதுங்கி நிற்கும் நிலைகளும் ஏற்பட்டு விடுகிறது. உப்பை தின்றவர்கள் தண்ணீர் குடித்தே தீர வேண்டும் என்ற நிலை இருந்தாலும், இப்படியொரு மிகப்பெரிய தவறை அப்பட்டமாக செய்வது எப்படி ? என்பதை மிக ஆழமாக ஆய்வு செய்யவேண்டிய ஒன்றாக இருந்தாலும், ஏதோ போக்குவரத்து துறை பணி யாளர்களின் கெட்ட நேரமும், அமுதராஜ் –க்கான நல்ல நேரமும் தான் இந்த வாகனமும் மீட்கப்பட்டு விட்டது. இப்படி அமுதராஜ் அவர்களால் கையாளாப் பட்ட இந்த முறை எப்போதுமே எல்லா காலங்களிலும் கைகொடுப்பதில்லை.

பனீந்திரரெட்டி ஐ.ஏ.எஸ்.





இறையன்பு ஐ.ஏ.எஸ்.

எனவே வாகனம் தொலைந்த வுடன் RTO அலுவலகம் சென்று பிளாக் செய்யப்பட வேண்டும் என் பதையும், அந்த பிளாக் செய்யப்பட்ட RTO அலுவலகத்தின் நகலை பெற்று காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும் என்பதை அதிர அதிகாரியான DGP அவர்களும், உள்துறை செயலர் அவர்களும் காவல் அதிகாரிகளுக்கு உத்திர விட்டு ஒரு சுற்றறிக்கையினை அனுப்பி, இதனை அமுல்படுத்தி னால் மட்டும்தான் இது போன்ற முறைகேடுகள் நடக்காமல் தடுக்கப் படும் என்பது உண்மையாகும்.

எனவே, வழக்கமான ஒரு வழக்கு என நினைத்து, பத்தோடு, பதினொன்றான ஒரு வழக்காக நோக்காமல், இது போன்ற நிகழ்வுகள் இனி எக்காலும் நடக் காமல் இருப்பதற்கான வழிகளை போக்குவரத்து துறை அதிகாரி களாலும் உருவாக்கப்படுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது ஒரு புறம் இருந்தாலும்...

இந்த சம்பவம் எழுந்தவுடனே RTO சுதாகர் அவர்களாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பட்டு இரண்டு பெண் பணியாளர்களான திருமதி சாந்தி, மற்றும் கவிதா ஆகிய இருவரும் செய்த அந்த முறைகேடான பணிகளை குறித்த விவரத்தினையும் தகவலாக தலைமை அதிகாரிகளுக்கு தெரியப் படுத்தியதோடு, உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் அவரால் பரிந்துரைக்கப்பட்டும் விட்டது மேலும் பெயர் மாற்றம் செய்யப்படுகிறபோது ஒரிஜினல் RC, இன்சூரன்ஸ் ஜெராக்ஸ், படிவம் –

29 – ல், அதில் விற்பவர் கையெழுத்துடன் இரண்டு கையெப்பம் மற்றும்

படிவம் 30–ல் – வாங்குகிறவரின் கையெப்பமும், அதே விண்ணப்பத்தில் கீழே மூன்று மாதிரி கையெழுத்துகளும், அதோடு ஆதார் அட்டை நகலோ, அல்லது இருப்பிட முகவரி சான்றுக்கான அபிடவிட் பத்திரமோ, பெயர் மாற்றப்படுவதற்கான ஆவணங்கள் என பல ஆவணங்கள் அனைத்தும் இணைத்து கொடுக்கப்பட்டு அவைகள் உரிய ஆய்வு செய்யப்பட்ட பின்பே பெயர் மாற்றம் செய்யப்படும் என்றாலும், இவைகள் எல்லாமே போலியானது என்பதை கூட அறியாமல், எதனையும் உற்று நோக்காமல் 'இந்தியன்' பட பாணியில் காசு கொடு, கையெழுத்தை வாங்கிங்கோ என்கிற ரீதியில் பணியை முடித்து கொடுத்துள்ளனர் 'ஔவை சண்முகிகள்', அதே நேரத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளாரால் பார்வையிடப்பட்டு, அவரது உறுதி தன்மைக்கு பின்பே பெயர் மாற்றத்திற்கான அப்ரூவல் வழங்கப்பட வேண்டும் என்ற விதியினையும் மீறி மோட்டார் வாகன ஆய்வாளரான முகுந்தன் அவர்களது கவனத்திற்கு கொண்டு செல்லாமலே அந்த வாகனம் ஆய்வு செய்யப்படாமலே பெயர் மாற்றமும் செய்யப்பட்டுவிடுவதும் மற்றொரு ஆணித்தரமான குற்றமாகி விடுகிறது..

இப்படி முழுக்க, முழுக்க, போக்குவரத்தின் நடைமுறை விதிகளை மீறி முறைகேடாக செய்திருப்பது துள்ளியமாக தெரியவருவதால், ஆணையரில் அதிரடியான நடவடிக்கைகளால் மேற்கண்ட சூப்பிரண்டு மற்றும் அஸிஸ்டண்டும் ஆகிய இருவரும் கைது செய்யப்படும் சூழலுக்கு வந்தாலும், மேற்கண்ட நபர்களும் ஒரு அரசு ஊழியர் என்பதால், காவல் அதிகாரிகளின் மனிதாபமானத்தால் கடினமான விசாரணைகள் என்பது இதுவரை இல்லாமலே போய் கொண்டுள்ளது.

இந்த நிலையில் துறைரீதியான நடவடிக்கைக்கான ஆணையரின் அதிரடியான நடவடிக்கையில் இவர்கள் தப்புவது என்பது கடினம்தான்.சரி. இதனையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு அடுத்த கட்டத்திற்கு செல்வோம்.

''ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டியா'' என்று சொல்வது போல, இந்த சம்பவத்தில் பணியாளர்கள் செய்த தவறுக்கு, சுகூடீ மற்றும் ஆய்வாளர்களை குறை சொல்வது என்பது கண்டிக்கதக்கது. (அப்படித்தான் சில ஊடகங்கள் சொல்லிக்கொண்டுள்ளது) ஆம். அரசு துறைகள் எதுவாக இருந்தாலும் சரி ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய பணிகள் என தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் அப்படியிருக்கையில், அலுவலக பணியாளர்கள், அலுவலக உயர்அதிகாரிகளின் கவனத்திற்கே கொண்டு செல்லாமல், 'ஒரு தவறை செய்கிறபோது' அதற்கு அந்த அலுவலக உயர் அதிகாரி எப்படி பொறுப்பேற்க முடியும் ?

அதே நேரத்தில் அந்த அலுவலக அதிகாரியின் அலட்சியப் பணி என குற்றம் சுமத்தப்படுவதும், அந்த அலுவலக அதிகாரியின் மீது எடுக்கப்படும் பணியிடை நீக்கமோ அல்லது பணியிட மாற்றமோ என நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் அது மிக தவறான நடவடிக்கைக்கு முன்னுதாரணமாக காட்டும் செயலாகவே அமையும். அதாவது போக்குவரத்து துறையின் நிர்வாக தவறுகளின் கோளாறுகளுக்கு இது முன்னுதாரணமாகிவிடும் என்பதையும் இங்கே நாம் சுட்டிக்காட்டிக் கொள்கிறோம்.

ஆம்... அதிரடியான நிர்மல்ராஜ் IAS – அவர்களது பெயருக்கும் இது களங்கமாகிவிடும். ஏனெனில் எழிலகத்தில் உள்ள ATC மணக்குமார், DTC நெல்லைப்பன் போன்ற சில அதிகாரிகளின் சுயநலங்களால் மட்டும்தான் அதிரடியான ஆணையரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்படும் தகவல்கள் எல்லாம் உண்மைக்கு புறமாக உள்ளதும், அவரது அதிரடியான நேர்மைகளை பயன்படுத்தி, அவரது கவனத்திற்கு கொண்டு செல்லும் தகவல்களை வைத்து, இந்த அதிகாரிகள் லஞ்சத்தில் கொழித்து வருவதும், தங்களுக்கு இணக்கமாக இல்லாத அதிகாரிகளை பழிதீர்த்துக்கொள்வதுமாய் செயல்பட்டு வருகின்றனர்.

இதற்கு ஒரு முக்கிய உதாரணமாகவே தாம்பரம் RTO அலுவலக சம்பவத்தை நினைவு கூர்கிறோம். மேலும்,எதற்கெடுத்தாலும் RTO அதிகாரிகள் தலையிலே பாரத்தை ஏற்றிவிடுவதும், சம்பந்தமே இல்லாத அந்த RTO அதிகாரிக்கு தண்டனைகளை வழங்குவது என்பதும் மோசமான நிர்வாகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு என கூறப்படும் நிலைக்கு போக்குவரத்து துறை முன்னிலை படுத்தப்பட்டுவிடும் என்பதால் ஆணையரின்



நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.

அறிவாற்றலால் மட்டும்தான் போக்குவரத்து துறையில் நடக்கும் உண்மைகளை அறிய முடியும் என்பதே நிதர்சனமாகும்.

எனவே போக்குவரத்து துறையின் இன்றைய மோசமான நிலைகளை களையெடுத்து, அதிரடி காட்டி வரும் நிர்மல்ராஜ் IAS அவர்களது கவனத்திற்கு, உரிய தகவல்களை தவறான, சுயநலங்களோடு, எடுத்துச் சொல்லும், ATC மணக்குமார், DTC நெல்லையப்பன், JTC சத்தியநாராயணன் போன்ற சில அதிகாரிகளின் மோசமான செயல்பாடுகளால்தான், தவறிழைக்காத அதிகாரியும் கூட தாம்பரம் சம்பவத்தில் தண்டைக்குள்ளானார்கள்.

அது மட்டுமல்லாது, இது போன்ற கொடுமையான ஊழல் அதிகாரிகளின் தவறான பரிந்துரைகளால்தான் அதிரடியான ஆணையருக்கே 'பல்பு'–ம், காட்டிவிட்டனர். ஆம் இன்று RTO அலுவலகங்களில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் பணிகளில் இரண்டு நாள் ஒட்டுனர் பயிற்சிப் பள்ளி நிர்வாகிகளுக்கும், மூன்று நாள் பொதுமக்களது பணிக்கும் என RTO அலுவலக பணியை ஒதுக்கிவிட்டு உத்தரவிட செய்த ஆணையரின் சுற்றறிக்கைகளால் பல்வேறு பொது மக்களும், ஒட்டுனர் பயிற்சி பள்ளி நிர்வாகிகளும், உரிய காலத்திற்குள் தங்களது ஒட்டுனர் உரிமம் மற்றும் பல்வேறு பணிகளையும் பெற முடியாமலும் தவித்து வருகின்றனர்.

குறிப்பாக அவசர பணியின் காரணமாக மாநிலம் விட்டு மாநிலம் செல்வோர்களும் மற்றும் வெளிநாடு பயணங்களை மேற்கொள்வோர்களின் சிரமங்களும் சொல்லி மாளாது (ஒட்டுனர்பயிற்சி பள்ளிகளிடம் மாதம், மாதம், ஒரு பெருந்தொகைகளை ATC மணக்குமார் மற்றும் DTC நெல்லையப்பனால் லஞ்சமாக கோரப்படுகிறது அவைகள் மறுக்கப்பட்டதினால் ஆணையருக்கு ஒரு தவறான செயல்களை முன்னிறுத்தி ஒட்டுனர் பயிற்சி பள்ளிகளுக்கு வேட்டு வைத்துவிட்டார்கள்). எனவே இதனை அரசும் சீர்தூக்கி பார்த்து, முன்ன இருந்த பணிகளின்படியே நடந்த வழக்கமான முறைகளின்படி, வாரத்தின் ஐந்து நாட்களும் பணிகள் நடப்பதற்கான உத்தரவுகளை ஆணையர் வழங்க வேண்டும் என தமிழகமெங்கும் இருந்து கோரிக்கை எழுப்பி வருகின்றனர். அல்லது மேலிட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் (PDL) அதாவது லஞ்சத்தை குறைத்தும், விஜிலென்ஸ் போலிசாரால் எடுக்கப்படும் அதிரடியான நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் என கோரிக்கைளையும், ஆங்காங்கே மோட்டார் வாகன அதிகாரிகள் எழுப்புவதற்கான ஒரு நடவடிக்கைகளையும் திருச்செந்தூர் RTO சம்பத்குமரால் அரசுக்கு எதிராக தூண்டப்பட்டும் வருவதாக கூறப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், முதலில் ATC மணக்குமாரால் தமிழகமெங்கும் உள்ள போக்குவரத்து அதிகாரிகளை மிரட்டி பெறப்பட்டு வரும் மாத மாமுலை நிறுத்த கோரியும் ஆங்காங்கே குரல்கள் எழுந்து வருவது குறித்து நடவடிக்கை எடுத்தால் நலம் பயக்கும்.

அதே போல், திருட்டு வாகனத்திற்கான RC–க்கள் வழங்குவது என்ற சம்பவங்கள் மேற்கண்ட கடலூர் RTO – ல் மட்டுமல்ல, தமிழகமெங்கும் உள்ள RTO அலுவலகங்களில் பல்வேறு சூப்பிரண்டு மற்றும் அஸிஸ்டெண்டுகளின் முறைகேடான பணிகளால் திருட்டு வாகனங்களுக்கும் RC –க்கள் வழங்கப்பட்டுத்தான் வருகிறது. அதே போல், நிதி நிறுவனத்தினரின் குண்டர்களால் வைத்து தூக்கப்படும் வாகனங்களுக்கும், சம்பந்தப்பட்ட வாகன நிர்வாகிகளின் ஒப்புதல்கள் இல்லாமலே, இப்படி முறைகேடான வழிகளில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுதான் வருகிறது. இந்த முறையிலும் நிதி நிறுவனத்தினரிடம் இருந்து பெரும் லஞ்சங்கள் பல சூப்பிரண்டு மற்றும் அஸிஸ்டெண்ட்டுகளின் கைகளுக்கும் மாறுகிறது.

அதே போல் இது போன்ற சம்பவம், இதே கடலூர் அலுவலகத்தில் நிறையவே நடந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அதனை நிரூபிக்கிற விதத்தில் தான் மேற்கண்ட சம்பவமும் கூட எந்தவித முறையான ஆவணங்களும் பெறப்படாமல் மிக சுலபமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதே மிகச்சிறந்த உதாரணமாக முன் நிற்கிறது.

எனவே, இது போன்ற தவறுகள் மேலும் தொடராமல் இருப்பதற்காகவும், போக்குவரத்து துறை மிக சிறப்பாக, ஊழல் நடைபெறாத அளவுக்கு நடந்திட அதிரடியான ஆணையர்தான் அதிரடி காண வேண்டும் என்றாலும், போக்குவரத்து துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்குரிய பணிகளை அவரவர்கள் மட்டுமே செய்திட கண்டிப்பான வழிகளை உருவாக்க வேண்டும்.

ஆம், உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி RTO–ல் உள்ள டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமி அவருக்குரிய பணிகளை செய்யாமல், செக்ஷன் பணிகளை பெற்று PA–வுக்கு அடிவருடியாக இருந்து முறைகேடான பணிகளை மேற்கொண்டு லஞ்ச பணத்தை குவித்து வருகிறார். அதனை இல்லையென்று PA நாகராஜ்தான் தான் மறுக்க முடியுமா ? இல்லை என்று டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமியால் தான் கூற முடியுமா ? ஒரு டைப்பிஸ்ட்–க்கு, அஸிஸ்டெண்ட்கள் செய்ய வேண்டிய செக்ஷன் பணிகளை செய்வதற்கான

அனுமதியை எதற்காக PA–வும், RTO–வும் அனுமதிக்கின்றனர் ?

ஒவ்வொரு அலுவலகங்களிலும் அஸிஸ் டெண்ட்கள் இருக்கிற போது அவரது பணிகளை ஒரு டைப்பிஸ்ட்–க்கு எதற்காக பிரித்துக் கொடுக்க வேண்டும் ? அவருக்கென டைப்பிங் பணிகள் இருக்கிற போது அஸிஸ்டெண்ட்களின் பணிகளை பிரித்து வெள்ளைச்சாமிக்கு ஏன் தர வேண்டும் ? இதனால் தான் முறைகேடுகள் உயர, உயர எழும்பி வருகிறது.

இது குறித்து திருநெல்வேலி PA நாகராஜிக்கு RTI – ல் விபரம் கோரினாலும், வெள்ளைச்சாமியால் கொடுக்கப்படும் லஞ்சப் பணத்திற்கான கமிஷனிற்கு, RTO மற்றும் PA–வும் வெள்ளைச் சாமிக்கு விசுவாசமாக இருந்து, தகவல் தர மறுத்து வருகிறார் (உரிய முறைப்படி மேல் முறையீடும் செய்துள்ளோம்) அதே நேரத்தில் நேரில் சென்று தகவல் கோரினாலும், PA நாகராஜ் நம்மிடம் தெரிவித்தது இதுதான்.. RTO–தான் டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமிக்கு செக்ஷன் பணிகளை பிரித்து கொடுத்துள்ளார் என்றும் கூறுகிறார். இப்படி தமிழகமெங்கும் சில RTO அதிகாரிகள் அவர்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, எவரவர் கூடுதலான லஞ்ச கமிஷன்கள் தருகிறார்களோ அவர்களுக்கு பணிகளை ஒதுக்கி முறைகேடான பணிகளை செய்யவும் வழிவகுத்து உள்ளனர்.

அதேபோல் ஆய்வாளர் செய்யவேண்டிய பணி களை RTO அதிகாரிகள் பிடுங்கி கொண்டு அவர்களே செய்து, தங்களது லஞ்ச வருமானத்தை கூடுதலாக்கி கொண்டும் வருகின்றனர். அதே நேரத்தில் தங்களது அதிகாரிகளிடம் இருந்து பெறப்படும் RTO–க்கான மாத மாமூலான லஞ்ச கமிஷனிலும் கூட, RTOக்கள் எதையுமே குறைக்கவும் இல்லை.

இப்படி ஆய்வாளர்களின் பணிகளை RTO அவர்களே மேற்கொண்டு லஞ்சத்தை பெருக்கு வதும், அவர்களிடம் இருந்து மாதம், மாதம், பெறப்படும் மாமுல்களும் குறைக்கப்படாத போது, கீழ்நிலை அதிகாரிகள் எங்கிருந்து RTO – க்கு கப்பங்களை செலுத்த முடியும் என்பதையும், அதிரடியான ஆணையர் அவர்களால் தான் முற்றுப் புள்ளி வைக்க முடியும். எனவே, அவரவரவர் பணி களை உரிய அதிகாரிகளே பணிசெய்திட கடும் நடவடிக்கைகளை ஆணையர் மேற்கொள்கிற பட்சத்தில் மட்டுமே பெருகி வரும் முறைகேடுகள் சற்று தவிர்க்கப்படும்.

தற்போது கூட கடலூர் RTOவிலும், இது போன்ற பிரச்சனைகள் RTO அதிகாரியால் நடந்து கொண்டுள்ளதால்தான், மேற்கண்ட இந்த பிரச்சனைகள் நடைபெற்றதாக கூறி, போக்குவரத்து தலைமை அலுவலகத்திற்கு பெட்டிஷன் பறந்துள்ள தாக ஒட்டுனர் பயிற்சி பள்ளி நிர்வாகிகளால் கூறப் பட்டு வருகிறது. அதனால் RTO – அதிகாரியான சுதாகரும், ஆய்வாளர் முகந்தனிடமும் விசாரணை நடத்த இருப்பதாக கடலூர் வட்டார செய்திகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக எந்தவொரு RTO அலு வலகங்களிலும், அதிகார துஷ்பிரயோகங்கள் நடந்திடாமல், அவரவர் பணிகளை அவரவர்கள் செய்தும், லஞ்ச வருமானத்தை அதிகளவில் ஈட்டுவதற்காக மற்றொருவர் பணிகளை பிடுங்கி RTO – அவர்களே செய்துகொள்வதும், அலுவலக பணிகளில் பணியாளர்களால் பெறப்படும் லஞ்சப் பணங்களிலும், கமிஷன்கள் எவர் அதிமாக தருகிறார்களோ அவர்களுக்கே முக்கிய பணிகளை RTO அளிப்பது போன்ற முறைகேடான பணிகளை செய்வதே, இது போன்ற அப்பட்டமான ஊழல் களுக்கு வழிவகுக்கிறது என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

எனவே, இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்காக RTO அலுவலரின் பணிகளை, எப்படி ஒரு ஆய்வாளரால் செய்வதற்கான உத்தரவுகள் இல்லையோ, அதே போல் ஒரு ஆய்வாளருக்கான பணிகள் மீதும், ஒரு சுகூட பங்கு கொள்ள அனுமதிக்காதபடியும் மற்றும் அவரவர்களுக்கான பணிகளை அவரவர்களே செய்ய வேண்டும் என்ற ‘கடிவாளத்தை’ சுற்றறிக்கை மூலம் ஆணையர் அமைக்கும்பட்சத்தில் மட்டும்தான் இனி வரும் காலங்களில் இது போன்ற ஊழல்களை தடுக்க முடியும்.

அதே போல் RTO–க்கள் காலியாக உள்ள அலுவலகங்களில் எல்லாம் அந்தந்த அலு வலகத்தின் PA–க்கள் மட்டுமே RTO – அலுவலக பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் உத்தரவுகளை வழங்குகிறபட்சத்தில், (இப்படியொரு நிலை பல வருடங்களுக்கு முன்பு இருந்ததும் குறிப்பிடதக்கது.) பெரும்பான்மையான, போட்டிகள், பொறமைகள், அதிகபட்ச ஊழல்கள் எல்லாமே தடுக்கப்பட்டுவிடும். எனவே அதிரடியான அமைச்சர் மற்றும் ஆணையர், அரசு செயலர்களும் இதற்கான உரிய நடவடிக்கை களை போர்க்கால நடவடிக்கையாக எடுக்க வேண்டும் என பணிந்து கோருகிறோம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

30–10–2022